# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 174/2024**

Deposition of Witness of PW4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மயில்சாமி | Calling | : | |
| Father/Husband's Name | : | சாமியப்பன் | Age | : | |
| Village | : | | | : | |
| Taluk | : | | | : | |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 24th March 2026.

எதிரி ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது சாவடிப்பாளையம் புதூரில் வசித்து கொண்டு லாரி வைத்து தொழில் செய்து வருகிறேன். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஜனவரி மாதம் தேதி ஞாபகம் இல்லை. காலை 6.00 முதல் 6.30மணியளவில் நான் ஈரோடு நோக்கி எனது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தேன். RD கல்லூரி அருகில் மொடக்குறிச்சி போலீஸார் நின்று இருந்தார்கள். முன்தினம் நடந்த விபத்து சம்பந்தமாக மொடக்குறிச்சி போலீஸார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் வரைந்தார்கள். அதில் நான் கையெழுத்து செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**

நான் கையெழுத்து செய்த போது யார் யார் இருந்தார்கள் என்றால் 6,7 நபர்கள் நின்று இருந்தார்கள். நான் கையெழுத்து போட்ட ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்றால் அதுபற்றி தெரியாது. என்னுடன் யார் கையெழுத்து போட்டார்கள் என்றால் ஒரு நபர் போட்டார், அவர் யாரென்று எனக்கு தெரியாது.

VIJAYAKUMAR K Digitally signed by VIJAYAKUMAR K Date: 2026.03.24 17:34:11 +0530

போலீஸார் எப்போது காவல்நிலையத்திற்கு வரச்சொன்னார்கள் என்றால் வரச்சொல்லவில்லை. பின்னிட்டு என்னை போலீஸார் விசாரித்தார்களா என்றால் இல்லை. விபத்து சம்பந்தமாக போலீஸார் விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. போலீஸார் என்னை சாட்சியாக இருக்கச் சொல்லி கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் கையொப்பம் போட்டேன் என்றால் சரிதான்.

**மறு விசாரணை இல்லை.**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.03.24 17:34:16 +0530

## DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 174/2024**

Deposition of Witness of PW3

| | | | |
|---|---|---|---|
| Name | : சரவணன் | Calling | : |
| Father/Husband's Name | : | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 24th March 2026.

எதிரி ஆஜரில் உள்ளார்.
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது ஆராம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 03.01.2023 ம் தேதி பகல் 11.30 மணிக்கு ஈரோடு RD கல்லூரிக்கு எதிர்புறம் இருசக்கர வாகனத்தில் நான் எனக்கு பின்னால் எனது அப்பாவை உட்காரவைத்து கொண்டு சென்றபோது எனக்கு எதிர்புறம் மாருதி ஸ்விட்ப் கார் TN 47 S 237 என்ற கார் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாக எந்த செய்கையும் இல்லாமல் ரோட்டிற்கு வலதுபுறமாக அதன் ஓட்டுநர் ஓட்டி வந்து எங்கள் மீது மோதி விட்டார். நான் காரின் கண்ணாடியில் விழுந்துவிட்டேன். என் அப்பா நாகராஜ் காருக்கு பின்னால் தூக்கி வீசப்பட்டு என் அப்பாவிற்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது, எனக்கு முகத்திலும் கண், தாடை, மூக்கிலும் காயம் ஏற்பட்டது.

2. விபத்தை ஏற்படுத்தி மாருதி ஸ்விப்ட் காரை ஓட்டி வந்த நபரை பார்த்தால் அடையாளம் சொல்லமுடியும். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள நபர் தான் மேற்படி விபத்தை ஏற்படுத்தி நபர் ஆவார். அருகில் இருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொன்னார்கள். என்னையும் எனது அப்பாவும் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அங்கிருந்தவர்கள் அனுப்பி வைத்தார்கள். மேல்சிகிச்சைக்காக என் அப்பாவை ஈரோடு அரசு மருத்துவமனையில் இருந்து சேலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். 06.01.2023 அன்று என்

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.03.24 17:34:52 +0530

அப்பா சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். நான் 2 நாட்கள் ஈரோடு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். நான் மருத்துவமனையில் இருந்தபோது போலீஸார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிரேத விசாரணையின் போது உடன் இருந்தேன். பிரேத பரிசோதனை முடித்து என் அப்பாவின் உடலை ஒப்படைத்தார்கள். போலீஸார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**

இந்த விபத்து சம்பந்தமாக நான் நஷ்டஈடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். மேற்படி வழக்கில் நஷ்டஈடு பெற்று கொண்டேனா என்றால் இல்லை. எனது வீட்டில் இருந்து 11.00 மணிக்கு கிளம்பினேன். சம்பவ இடத்திற்கு முன்னதாக L வடிவில் ஒரு பெரிய வளைவு இருக்கிறது என்றால் சரிதான். L வடிவில் ஒரு பெரிய வளைவு திரும்பியவுடன் ரோடு ஏற்றமாக செல்லும் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு வடபுறம் முன்னதாக சின்னியம்பாளையம் பிரிவு பஸ் ஸ்டாப் உள்ளது என்றால் சரிதான். அதற்கு முன்னதாக வேகத்தடை உள்ளது என்றால் சரிதான்.

2. இவைகளை தாண்டி ஸ்விட்ப் கார் சம்பவ இடத்திற்கு வரவேண்டும் என்றால் சரிதான். எனது வாகனத்திற்கு முன்பாக என்ன வாகனம் சென்றது என்றால் எந்த வாகனமும் செல்லவில்லை. காருக்கு முன்னதாக எந்த வாகனம் வந்தது என்றால் ஒரு இருசக்கர வாகனம் சென்றதது. இருசக்கர வாகனம் காருக்கு முன்னதாக வந்ததாக எனது போலீஸார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. எந்த வாகனமும் செல்லாததால் தான் எனது புகார் வாக்குமூலத்தில் சொல்லியிருப்பேன் என்றால் என்னிடம் கேட்கவில்லை, அதனால் அப்போது சொல்லவில்லை. புகார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் நான் சொன்னேனா அல்லது போலீஸார் எழுதிக் கொண்டார்களா என்றால் போலீஸார் எழுதிக்கொண்டார்கள்.

3. சம்பவ இடத்திற்கு அருகில் வட்டார போக்குவரத்து கழகம் உள்ளது என்றால் சரிதான். அங்கு நிறைய வாகனங்கள் எப்போது நிறுத்தி வைக்கப் பட்டிருக்கும் என்றால் சரிதான். நான் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வரும் திசையில் மேல்புறமாகத்தான் ஆய்வாளர் வாகனங்களை தணிக்கை செய்வார் என்றால் சரிதான். அவ்வாறு வாகனங்களை தணிக்கை செய்துமுடித்த

VIJAYAKUMAR K Digitally signed by VIJAYAKUMAR K Date: 2026.03.24 17:34:57 +0530

வாகனங்கள் கிழக்கே வந்து மெயின் ரோட்டில் வடக்கோ அல்லது தெற்கே செல்ல வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு வாகன தணிக்கை முடித்து வந்த ஒரு வாகனத்தை நான் கவனிக்காமல் ரோட்டின் வலதுபுறமாக ஏறி சென்று எதிரே வந்த ஸ்விட்ப் காரில் நான் தான் அதிவேகமாக சென்று மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு முழு காரணம் எனது அதிவேகமும், அஜாக்கிரதையும் தான் என்றால் சரியல்ல. விபத்து நடந்த பிறகு என்னை யார் 108 ஆம்புலன்ஸ்–ல் அனுப்பி வைத்தார்கள் என்றால் நடராஜ், சுரேஷ். நடராஜ், சுரேஷ் ஆகிய இருவரும் அனுப்பி வைத்தார்கள் என்று போலீஸார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் நான் சொல்லாமல் போலீஸார் அவ்வாறு எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். போலீஸார் என்னை எத்தனைமுறை விசாரித்தார்கள் என்றால் ஒருமுறை விசாரித்தார்கள்.

4. 03.01.2023 அன்று மதியம் 3.00 மணிக்கு விசாரித்து கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். நான் அதே தேதியன்று புகார் கொடுத்தேனா என்றால் சரிதான். எழுத்துமூலமான புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். சம்பவத்திற்கு பின்னிட்டு காவல்நிலையத்திற்கு நான் எப்போது சென்றேன் என்றால் 07.01.2023 அன்று சென்றேன். சாட்சி சுரேஷ், குணசேகரன் ஆகியோர்கள் என்னுடன் வந்தார்களா என்றால் இல்லை. நான் தனியாகத்தான் சென்றேன். அன்றைய தினம் காவல்நிலையத்தில் கையெழுத்து வாங்கவில்லை. 07.01.2023ம் தேதி காவல்நிலையத்திற்கு என்ன காரணத்திற்காக வரச்சொல்லி இருந்தார்கள் என்றால் இருசக்கர வாகனத்தை எடுப்பதற்காக வரச்சொன்னார்கள். சம்பவத்தின் போது நான் ஓட்டி வந்த வாகனத்திற்கு வாகன காப்பீடு மற்றும் ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்றால் இருந்தது.

5. நான் சொல்வது போல் நான் ஓட்டி வந்த வாகனத்திற்கு வாகன காப்பீடு இல்லை என்பதால் என் மீது தவறை வைத்துக்கொண்டு நஷ்ட ஈடு பெறவேண்டி எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த விபத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. விபத்து எனது அஜாக்கிரதையால் நடைபெற்றது என்றால் சரியல்ல. அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் நடராஜ், சுரேஷ் ஆகிய இருவரும் என்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாக எழுதப்பட்டுள்ளது என்றால் அந்த புகார் வாக்குமூலத்தை நான் எழுதவில்லை.

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.03.24 17:35:01 +0530

அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை நான் சொல்ல சொல்ல போலீஸார் எழுதினார்கள்.

6. நான் சொன்ன சங்கதிகளை எழுதி என்னிடம் படித்து காண்பித்த பிறகு தான் நான் கையொப்பம் போட்டேன் என்றால் ஆமாம், என்னிடம் போலீஸார் படித்து காண்பித்தார்கள். எனக்கு எழுதபடிக்க தெரியும். நான் புகார் வாக்குமூலத்தை படித்து பார்த்தேனா என்றால் என்னால் அப்போது கண்ணில் அடிபட்டு இரத்தம் வந்ததால் என்னால் படிக்கமுடியவில்லை. கையெழுத்து போட முடிந்தது, ஆனால் படிக்க முடியவில்லை.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.03.24 17:35:06 +0530